**செய்தி வெளியீடு எண்: 45/2022** **நாள்: 18.06.2022**

**மாற்றுத்திறன் மாணவ, மாணவியர்களை மகிழ்விக்கும் வகையில்**
**திடீரென மெட்ரோ இரயிலில் பயணித்தார்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரான**
**முதன்மை செயலாளர் எம்.ஏ.சித்திக்**

சென்னை, செனாய் நகர் மெட்ரோ இரயில் நிலையம் அருகில் உலக தரம் வாய்ந்த பொழுதுபோக்கு பூங்கா உருவாக்கப்பட்டு வருவதை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரான முதன்மை செயலாளர் எம்.ஏ.சித்திக் ஆய்வு செய்தார்.

உலக மன இறுக்கம் பெருமை தினத்தை முன்னிட்டு (World Autistic Pride Day) சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், யங் இந்தியன்ஸ் தொண்டு நிறுவனத்துடன் இணைந்து சிறப்புப் பள்ளிகளைச் சார்ந்த மாணவ, மாணவியர்கள் சென்னை மெட்ரோ மெட்ரோ இரயிலில் பயணம் செய்ய செனாய் நகர் மெட்ரோ இரயில் நிலையத்திற்கு வருவதை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரான முதன்மை செயலாளர் எம்.ஏ.சித்திக் கண்டறிந்தார். அப்போது அவர்களை மகிழ்விக்கும் வகையில் திடீரென சிறப்புப் பள்ளிகளைச் சார்ந்த மாணவ, மாணவியர்களுடன் உற்சாகமாக மெட்ரோ இரயிலில் பயணித்தார்.

மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளிடன் தனி அன்பு செலுத்த வேண்டும். அவர்களின் செயல்பாடுகளை பெற்றோர்கள் மட்டும் அல்ல, அவர்களின் திறன்களை, திறமைகளை வெளிக்கொண்டு வருவது சிறப்புப் பள்ளி ஆசிரியர்களும் தான். அவர்களை சக மனிதர்களுடன் பழக வைப்பதும், அவர்களுடன் மற்றவர்களை ஒன்றிணைப்பதும் சிறப்புப் பள்ளி ஆசிரியர்கள் தான். இவர்களுக்கெள்ளாம் உறுதுணையாக அரசும் இருக்கிறது. அதோடு மட்டும் அல்லாமல் சிறப்பான தொண்டு நிறுவனங்களும், பள்ளிகளும் இருக்கிறது. மாற்றுத்திறன் கொண்டவர்கள் மெட்ரோ இரயிலில் பயணிக்கும் போது அவர்களுக்கு தேவையான வசதிகளை செய்து தர சென்னை மெட்ரோ இரயில் நிர்வாகம் தயாராக உள்ளது. இக்குழந்தைகளுடன் மெட்ரோ இரயிலில் பயணிப்பது

மகிழ்ச்சி அளிக்கிறது என்று யங் இந்தியன்ஸ் தொண்டு நிறுவன தன்னார்வலர்களிடம் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரான முதன்மை செயலாளர் எம்.ஏ.சித்திக் தெரிவித்தார்.

ஆயுர் சுகம் சிறப்புப் பள்ளி - அம்பத்தூர், ஸ்டெப்பிங் ஸ்டோன்ஸ் சிறப்புப் பள்ளி - அரும்பாக்கம், விஜய் ஹூமர் சர்வீசஸ் - கே.கே.நகர், அரவிந்த் அறக்கட்டளை - கே.கே.நகர் மற்றும் ஜினேந்திர ஜோதி - பாடி ஆகிய சிறப்புப் பள்ளிகளைச் சேர்ந்த 215 குழந்தைகள் மற்றும் தன்னார்வலர்கள் 15 நபர்களும் செனாய் நகர் மெட்ரோ இரயில் நிலையத்தில் இருந்து விமான நிலையம் மெட்ரோ இரயில் நிலையம் வரை உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனும் மெட்ரோ இரயிலில் பயணம் செய்தனர்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரான முதன்மை செயலாளருடன், இயக்குநர் டி. அர்ச்சுனன் (திட்டங்கள்), கூடுதல் பொது மேலாளர் எஸ். சதீஷ் பிரபு (இரயில் பராமரிப்பு மற்றும் இயக்கம்), அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் இந்த பயணத்தின் போது உடன் சென்றிருந்தனர்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**